பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 13உ (29-11-67) புதன் வெளியூர்: கார்த்திகை 14உ (30-11-67) வியாழன் [இதழ்: 139

சி. சுப்பிரமணியம் கசப்பதேன்?

கட்சித் தலைவர் தேர்தலில் காமராசர் போக்கு!

" 'நந்தா வெற்றிபெறுவது சாத்தியமில்லை' என்று தெரிந்தால், சி. சுப்பிரமணியம் கட்சித் தலைவராக வருவதற்குத் தலைமை அமைச்சர் இந்திரா ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்.

"இந்த அடிப்படையில், காமராசரின் ஒப்புதலைப் பெறச் சென்ற சுப்பிரமணியம், ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கிறார்!

இவ்வாறு மாலைப் பத்திரிகை ஒன்றின் புதுடில்லிச் செய்தி கூறியுள்ளது.

வளர்த்த கடா மார்பில் பாய்கிறது!

எஸ். கே. பாட்டிலுக்கு எதிராக சிவசேனு வெறியர் ஆர்ப்பாட்டம்

பம்பாய் நகரில் நேற்று நடைபெற்ற காங்கிரசுக் கூட்டமொன்றில், 'சிவசேனு' தொண்டர்கள் குறுக்கிட்டுக் குழப்பம் விளைவித்ததுடன் நில்லாமல், அக்கூட்டத்தில் பேசிய பாட்டிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து, 'கேரோ' நடத்தி இருக்கின்றனர்!

போலீசாரின் பாதுகாப்புடன், பாட்டில், இல்லம் திரும்பியிருக்கிறார்!

கூட்டத்தில் ஒரு பேச்சாளர் இந்தியில் பேச முயன்றபோது, 'மராத்தியில் பேசு' என்று சத்தம் போட்டு, 'சிவசேனு வாழ்க' என்றும் அவர்கள் முழங்கியிருக்கின்றனர்!

கழக ஆட்சியில் கதர் பெற்ற சிறப்பு!

இவ்வாண்டு விற்பனையில் சாதனை!

சென்னை, நவ. 29—

" இந்த ஆண்டு கதர் விற்பனையில், பெரும் சாதனை ஏற்பட்டிருக்கிறது " என, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி சட்டமன்றத்தில் அறிவித்தார்.

கதர் விற்பனையைக் கட்டாயமில்லாததாக்கி—அதே நேரத்தில் கவர்ச்சிகரமானதாக்கியதால், இவ்வாண்டு தீபாவளி விற்பனையில் ரூ. 10 இலட்சம் அளவுக்கு அதிகரித்தது என்றும், கறுப்பு – சிவப்பு கரை போட்ட வேட்டி துண்டுகள் மட்டும் ஓர் இலட்சத்துக்கு மேல் விற்பனையாயிற்று என்றும், காங்கிரசு—கழகச் சின்னங்கள் மட்டுமன்றி, சுதந்தரா, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சின்னங்களும் பொறிக்கப்பட்ட கதராடைகள் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டன என்றும், கட்டாயம் இல்லாமல் வேண்டுகோள் விடுத்ததன் மூலமே, இவ்வாண்டு நிறைய விற்பனையாயிற்று என்றும், பொதுமக்கள் விரும்புகிறவண்ணம் தயாரிக்கப்பட்டதே இதற்குக் காரணம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சர்க்கரைக் கட்டுப்பாட்டில் தளர்ச்சி---பாதி துப்புரவுக்குச் சமமானதாம்!

" சர்க்கரை விநியோகக் கட்டுப்பாட்டினைப் பாதியாகத் தளர்த்தியிருப்பது, பாதி துப்புரவாக இருப்பதற்குச் சமமாகும் "

என்று நாடாளுமன்றத்தில் பேசுகையில், ஆந்திரத்து உறுப்பினர் தென்னேட்டி விசுவாநாதன் குறிப்பிட்டிருக்கிறார்.

"நண்பர், சொந்த அனுபவத்தையே குறிப்பிடுகிறார்" என, அவரை இடைமறித்து, உணவு அமைச்சர் செகசீவன்ராம் பதிலளித்திருக்கிறார்!

கொடுத்துச் சிவந்த கரங்கள்-- வாங்கித் தேய்ந்த காசுகள்!

இந்தியாவுக்கு உதவிய வெளிநாடுகள்--- முன்னணியில் நிற்கிறது அமெரிக்கா!

1967 சூன் திங்கள் முடிந்த காலத்தில் இந்தியாவுக்கு உதவிய நாடுகளின் வரிசையில் அமெரிக்காதான் முதலில் நிற்கிறது! இந்தியா அமெரிக்காவிடமிருந்து பெற்ற உதவியின் மதிப்பு, ரூ. 2379.43 கோடிகளாகும்!

அடுத்தவரும் ;நாடு, சோவியத் யூனியன்; இரஷ்யாவிடமிருந்து நாம் பெற்றிருக்கும் உதவி ரூ. 1,021.13 கோடிகள்!

மற்ற நாடுகளின் வரிசையும் அவை கொடுத்துள்ள உதவியின் மதிப்பும் வருமாறு:—

மேற்கு ஜெர்மனி	ரூ.	749.80	கோடி
பிரிட்டன்	ரூ.	663.60	,,
ஜப்பான்	ரூ.	307.09	,,
கனடா	ரூ.	114 87	,,
இத்தாலி	ரூ.	153.01	,,
பிரான்சு	ரூ.	102.76	,,
செக்கோஸ்லேவேகியா	ரூ.	99.38	,,
யுகோஸ்லேவேகியா	ரூ.	93.75	,,

உருவு கண்டு எள்ளாமை....!

"தோற்றத்தைக் கண்டு மனிதனின் தன்மையை—திறமையை எடை போடும் போக்கு கூடாது" என்பதற்கு, முதலமைச்சர் அண்ணு அவர்கள், தாமே ஒரு பரிசோதனைப் பொருளாக ஆக்கப்பட்ட சம்பவத்தை, 'சட்டப்;பேரவை விதிகள்' பற்றிய தமிழ்ப் புத்தகத்தை வெளியிடும் நிகழ்ச்சியின்போது தெரிவித்தார்கள்.

உருவம் 'நன்ருக' இருந்தால்தான், 'ஆங்கிலம் அறிந்தவர்' என்று பலர் நினைக்கிறார்கள். 'அண்ணி'யாரை இராயப்பேட்டை மருத்துவமனையில் ஒருமுறை சென்று பார்க்க நேர்ந்தபோது, அண்ணு அவர்களையே அங்கே இருந்த நர்சுப் பெண்மணி ஒருவர், 'உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?' எனக் கேட்டிருக்கிறார்!

பலத்த சிரிப்பொலிக்கிடையே இதைத் தெரிவித்த அண்ணு அவர்கள், "சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனுரைக்கூட எவரும், 'பார்-அட்-லா படித்தவர்' என நினைக்க மாட்டார்கள்" எனக் கூறி, வேடிக்கையைப் பகிர்ந்துகொண்டார்கள்!

பவுன் மதிப்பு குறைப்பு- இந்திய அதிகாரிகள் ஆய்வு

புதுடில்லி, நவ. 28—

பவுன் மதிப்புக் குறைந்ததின் காரணமாக, இந்தியாவின் நலனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக நிதி—வணிக அமைச்சுத் துறைகளின் உயர் அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

"பிரிட்டனுக்கு இந்தியா 2,450 இலட்சம் பவுன் கடன் தரவேண்டும்; இந்தியாவின் மொத்தக் கடனில், இது, பத்து சதவீதமாகும்" என்று நிதி அமைச்சுத்துறை அதிகாரி ஒருவர் கூறினர்.

கவர்னர்கள்மீதான வெறுப்பு!

கண்டனம் இரண்டு வகை!

இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த 71 நாடாளுமன்ற உறுப்பினர்கள், வங்காளத்துக் கவர்னர் தர்மவீராவை, பதவியிலிருந்து திரும்பப் பெறக் கோரி குடியரசுத் தலைவருக்கு எழுதியுள்ள முடங்கலில் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

"வங்காளத்து விவகாரத்தில் தர்மவீரா நடந்துகொண்ட முறைதான் இதற்குக் காரணம்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

அமைச்சரவை விருப்பத்துக்கு எதிராக பதவி நியமனம் பெற்றிருக்கும் கவர்னர் கனுங்கோவை வரவேற்பு வைபவம் ஏதுமில்லாமல் பகிஷ்கரிப்பதென மத்தியப் பிரதேச அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

மாநிலப் பண்பு—மனிதாபிமானம் ஆகியவற்றினை மட்டும் காட்டும் வகையில், நகருக்குக் கவர்னர் வரும்போது, முதலமைச்சர் மட்டும் சென்று சாதாரணமாக அவரை வரவேற்க இருக்கிறார்!

நிர்வாணம் அழகாகத் தோன்றுவது எப்போது?--- டிகால் விளக்கம்

நாணயக் குறைப்புத் துறையில், 'இங்கிலாந்து நிர்வாணமாக்கப்பட வேண்டும்' என்று தான் கூறியதாக வெளிவந்துள்ள செய்தியொன்றினை பிரெஞ்சு அதிபர் டிகால் மறுத்திருக்கிறார்.

தொடர்ந்து பேசுகையில் சிரிப்பொலிக்கிடையே கூறியதாவது:—

" அழகாக இருப்பவர்களின் நிர்வாணம், மறுக்கப்படக்கூடியதல்ல — ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதுதான்!"

கழக அமைச்சர்கள் கதரணிவது எப்போது?

விஞயகம் கேள்விக்கு அண்ணு பதில்

சென்னை, நவ. 29—

இன்று சட்டமன்றத்தில் கதரரைப் பற்றிய ஒரு கேள்வி எழுந்தபோது, காங்கிரசு உறுப்பினர் திரு. கே. விஞயகம் எழுந்து, "கதருக்கு இன்றைய ஆளுங்கட்சி ஆதரவளிப்பது மகிழ்ச்சிக்குரியது; அதே நேரத்தில் அமைச்சர்கள் ஒன்பது பேரும் கதர் அணிந்து கொள்ள முன்வருவார்களா?" என்று கேட்டார்.

இதற்கு முதலமைச்சர் அண்ணு அவர்கள், "நண்பர் விஞயகம் அவர்கள் இந்த ஐந்தாண்டுக் காலம் வரை காங்கிரசுக் கட்சியில் தொடர்ந்து நீடித்து இருக்கிறாரா என்பதைப் பார்த்து, அதன் பிறகு நாங்கள் கதர் அணியலாம் என்று இருக்கிறோம்" என்று பதிலளித்தார்கள். (அவையில் சிரிப்பு)

கே. விஞயகம்:—"நான் காங்கிரசில் நீடித்து இருப்பேனு என்பதில் முதலமைச்சருக்கு ஐயம் ஏற்படக் காரணம் என்ன?"

அண்ணு:—"நண்பர் விஞயகம் அவர்களின் கடந்த கால நடவடிக்கைகளைக் கொண்டே எனக்கு இந்த ஐயப்பாடு ஏற்பட்டது; ஏனெனில், ஒரு காலத்தில் நானும் அவரும் ஒன்ருக இருந்து (எதிர்க் கட்சியில்) பணியாற்றியவர்கள்." (மேலும் சிரிப்பொலி எழுந்தது.)

பம்பாயில் புதிய கட்சி

இன வெறியாட்டத்தைத் தவிர்க்கும் ஏற்பாடு

பம்பாய், நவ. 28—

பம்பாய் நகரில் வாழ்கின்ற பல்வேறு மொழி பேசும் மக்களிடையே ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த, அரசியல் பற்றற்ற கட்சி ஒன்று பம்பாயில் தொடங்கப்பட்டிருக்கிறது; 'சர்வ பாஷிய சமரட்சண சமிதி' என்பது இதன் பெயர்.

பொதுவாக மராட்டியரல்லாதவர்களையும் குறிப்பாகத் தென்னகமக்களையும் 'சிவசேனு' தாக்கிவருவதையும், வன்முறையில் ஈடுபடுவதையும் இப்புதிய கட்சி கண்டித்து இருக்கிறது.

இப்புதிய கட்சி, 'சேனை' எதையும் தொடங்காது!

மத்திய அரசுக்கு எதிராகப் பத்திரிகை விளம்பரம்

புதுடில்லியின் உணவுக் கொள்கைக்கு கேரள அரசு கண்டனம்

'அரியவும்—சிந்திக்கவும்' என்ற வரிசையில், இரண்டு பத்திகள் அடங்கிய பத்திரிகை விளம்பரங்களை, கேரள அரசின் செய்தித் துறை வெளியிட்டிருக்கிறது.

கட்டணம் கொடுத்துப் பிரசுரமாகியுள்ள இந்தப் பத்திரிகை வெளியீடுகள், புதுடில்லியின் உணவு விநியோகக் கொள்கையைக் கண்டனம் செய்வதாக இருக்கிறது.

"கேரள அரசு வெளிநாடுகளிலிருந்து 35-க்கு மேற்பட்ட உதவிகளை பெறக்கூடிய நிலையில் இருக்கிறது; அந்த வெளிநாட்டு உதவி பற்றிய தகவல்கள் மத்திய அரசின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது"

என்று, கேரள உணவு அமைச்சர் திருமதி கௌரி தாமஸ், பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 13 (29—11—67) புதன்

புதுமை சனநாயகம்!

காங்கிரசுக் கட்சியின்மீது மக்களுக்கு இருந்துவந்த கசப்பும் வெறுப்பும், நான்காவது பொதுத் தேர்தலில் ஐயத்திற்கிடமின்றி வெளியாகிவிட்டன. தேர்தல் மூலம் காங்கிரசுக் கட்சிக்கு மக்கள் மனமுவந்து தந்த வெகுமதி இதுதான்!

பல மாநிலங்களில் காங்கிரசுக் கட்சிக்கு எதிராக மக்கள் தந்திருக்கின்ற தீர்ப்பில் பொதிந்துள்ள அரிய படிப்பினையை, அக்கட்சித் தலைமை தெரிந்துகொள்ளாமல் இருந்திட நியாயமில்லை. 'பதவியிலிருந்து தங்களை மக்கள் என்றும் வெளியேற்றத் துணியமாட்டார்கள்' என்ற அசைக்கமுடியாத நமபிக்கையில் காங்கிரசுத் தலைமை இருந்துவந்தது. அந்த நம்பிக்கையுடன் இருந்தவரையில், அக்கட்சித் தலைமையும், 'சனநாயகம்'—'மக்களாட்சி முறை' என்றெல்லாம் பீத்திக்கொண்டு வந்தது.

ஆனால், தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்த தோல்வியைக் கண்டதும், 'சனநாயகம்' என்ற சொல்லே தங்களுடைய கட்சியைக் கருவறுக்க உள்ள கொல்கருவியென அக்கட்சித் தலைமை தீர்மானித்துக் கொண்டுவிட்டது. எனவே, சனநாயக முறைகளைத் திட்டமிட்டுச் சீரழித்து வருவதில் நாட்டம் கொண்டு விட்டிருக்கிறது, காங்கிரசுக் கட்சித் தலைமை!

தேர்தலில் மக்கள் தந்துள்ள தீர்ப்புக்கு ஒப்ப, பல மாநிலங்களில் காங்கிரசுக் கட்சி அல்லாத கூட்டணி ஆட்சி ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட கூட்டணி ஆட்சிகளைக் கவிழ்ப்பதில், சனநாட்க நடைமுறைக்கு முழுதும் ஒவ்வாத இழிமுறைகளைக் கையாளத் தொடங்கிவிட்டது, காங்கிரசுத் தலைமை!

"கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆட்சியில் ஆதிக்கம் செலுத்திவர வேண்டும்" என்ற தனது முடிவை, முதன்முதலாக அரியானாவில் அமைத்திருந்த கூட்டணி ஆட்சியைக் கவிழ்ப்பதில், காங்கிரசுத் தலைமை துவங்கி உள்ளது. அடுத்தாற்போல், வங்காளத்தில் அமைந்திருந்த கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, விரல்விட்டு எண்ணக் கூடிய சில உறுப்பினர்களை மட்டுமே கொண்ட தற்காலிக அரசியல் கட்சித் தலைவரை முதலமைச்சராக்கி, காங்கிரசுக் கட்சி, வங்காளத்தில் மறைமுகமாக ஆட்சிபுரிய ஏற்பாடு செய்துவிட்டது!

இவ்வாறு பி. சி. கோஷ் அவர்களை முதலமைச்சராகக் கொண்டு வங்காளத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சரவை, காங்கிரசுக் கட்சியின் ஆதரவில்தான் உயிர் வாழ்ந்துவர வேண்டும். காங்கிரசுக் கட்சியைச் சேராத அமைச்சரவையிடம் பதவியும், அப்பதவிக்குரிய முழு அதிகாரம் காங்கிரசுக் கட்சியினிடமும் இருந்திடும். இவ்வேற்பாட்டில், காங்கிரசுக் கட்சியினர் ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடித் தீரவேண்டிய கட்டாயத்தில், கோஷ் அமைச்சரவை சிக்கிக்கொண்டிருக்கிறது.

முதலமைச்சராகப் பதவியிலிருந்துவருகின்ற கோஷ், தம் மிச்சையாக எதையும் செய்யமுடியாது. 'தம் விருப்பம்போல் செயல்பட நினைக்கின்றார்' என்ற சந்தேகம் காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களுக்கு ஏற்பட்டாலும் போதும்—கோஷ் அமைச்சரவையை அதே விநாடியில் காங்கிரசுக் கட்சியினர் கவிழ்த்து விடுவர்!

எனவே, கோஷ் அமைச்சரவை, காங்கிரசுக் கட்சியினர் விரும்புகின்றவரையில்தான் பதவியில் இருக்கமுடியும். இவ்வாறு மற்றொரு கட்சியின் வலிவை மட்டுமே நம்பி வாழ்ந்துவர வேண்டிய அமைச்சரவையால், தனக்கு 'சரி' என்று பட்டதையும் செய்ய இயலாது!

இக்காரணத்தினால், வங்காளத்தில் உருவெடுத்திருக்கின்ற கோஷ் அமைச்சரவை, பெயரளவுக்குத்தான் காங்கிரசல்லாத அமைச்சரவையே அல்லாது, உண்மையில் அது, முகமூடி அணிந்த காங்கிரசு அமைச்சரவையே ஆகும்.

காங்கிரசல்லாத ஆட்சி அமைந்திட, பொதுத் தேர்தலில், காங்கிரசுக் கட்சிக்கு எதிராக வங்காள மக்கள் வாக்களித்தனர்; ஆனால் காங்கிரசுக் கட்சியோ, மக்கள் அளித்திருக்கின்ற தீர்ப்பை ஒதுக்கித் தள்ளிவிட்டு—முகமூடி அணிந்துகொண்டு—வங்காளத்தில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டுவிட்டது.

வங்காளத்தில் மட்டும்தான் காங்கிரசுக் கட்சி—மேற்குறித்தவாறு—காங்கிரசு அல்லாத சிறுபான்மை அரசியல் அமைப்பை ஆட்சிப்பீடத்தில் ஏற்றிவைத்துவிட்டு, திரைமறைவில் இருந்துகொண்டு ஆதிக்கம் செலுத்தத் துணிந்திருக்கிறது என்பதில்லை. வங்காளத்தில் செயல்பட்டிருப்பது போன்றே, பஞ்சாபிலும் காங்கிரசுக் கட்சி செயல்பட்டிருக்கிறது.

குருநாம் சிங் என்பவரை முதலமைச்சராகக் கொண்டு பஞ்சாபில், கூட்டு அமைச்சரவை செயல்பட்டு வந்தது; அந்த அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்துவந்த இலட்சுமண சிங் ஜில் என்பவர்—பதினேழு சட்டமன்ற உறுப்பினர்களுடன்—இருந்த கட்சியிலிருந்து இடம் பெயர்ந்துவிட்டார்.

இலட்சுமண சிங் ஜில்—ஏன் பதினேழு உறுப்பினர்களுடன்—இருந்த அரசியல் கூட்டிலிருந்து இடம் பெயர்ந்தார்? இவ்வாறு அவரையும் மற்றவர்களையும், இருந்த அமைப்பிலிருந்து இடம் பெயரச் செய்தவர்கள் எவர்? எந்த ஆசையைக் காட்டி அவர்களை, இருந்த இடத்திலிருந்து வெளியேறச் செய்தனர்?

இவற்றிற்கெல்லாம் கிடைக்கின்ற பதில் ஒன்றே ஒன்றுதான்; அதாவது, பொதுத்தேர்தலில் பொதுமக்கள் நம்பிக்கையை பெரும் அளவில் இழந்துவிட்ட காங்கிரசுக் கட்சிதான், இந்த அரசியல் கேலிக்கூத்துக்கெல்லாம் மூலகாரணமாகும்.

வங்காளக் கூட்டு அமைச்சரவையில் உணவு அமைச்சராக இருந்துவந்த கோஷ், காங்கிரசுக் கட்சியினரால் முதலமைச்சராக ஆக்கப்பட்டிருப்பது போன்றே, பஞ்சாபிலும் கூட்டு அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்துவந்த இலட்சுமண சிங் ஜில், முதலமைச்சராக ஆக்கப்பட்டுள்ளார்.

வங்காளத்தைப் போன்றே பஞ்சாபிலும், இலட்சுமண சிங் ஜில் என்பவரை முதலமைச்சராகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்ற அமைச்சரவைக்கு உயிர் கொடுத்துள்ளவர்கள்—உயிர் கொடுத்து வரக்கூடியவர்கள், காங்கிரசுக் கட்சியினரே ஆவர். இலட்சுமண சிங் ஜில்தான் பஞ்சாபின் முதலமைச்சர்—ஆட்சியின் முதல்வர்; ஆனால், அவரைக் கைப்பாவையாக ஆக்கி ஆட்சியில் ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்கள், காங்கிரசுக் கட்சியினரே ஆவர்.

காங்கிரசுக் கட்சியின் ஆட்சிக்குப் பொதுத்தேர்தலில் முற்றுப்புள்ளிவைத்தனர்—பஞ்சாப் மக்கள்; அந்தப் பொதுமக்களின் முடிவை, காங்கிரசுக் கட்சி மதிக்கத் தயாராக இல்லை. அவர்களுடைய தீர்ப்பை, தங்கள் காலில் போட்டு மிதித்துத் துவைத்துவிட்டனர், காங்கிரசுக் கட்சியினர்!

தமது அமைச்சரவையிலிருந்து கல்வி அமைச்சர் இலட்சுமண சிங்கும், மற்றும் பதினேழு உறுப்பினர்களும் வெளியேறிவிட்டனர் என்ற தகவலைத் தெரிந்துகொண்டதும், தமக்குப் போதிய வலிவு இருக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்துகொண்ட முதலமைச்சர் குருநாம் சிங், தமது முதலமைச்சர் பொறுப்பைத் துறந்தார்.

சட்டமன்றத்தைக் கூட்டி, தமக்கு ஆதரவு இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ளுகின்றவரையில், தமது முதலமைச்சர் பதவியை குருநாம் சிங் துறந்திருக்கத் தேவையில்லை. சட்டமன்றத்தின் முடிவு தெரிகின்றவரையில், அவர் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்துவரலாம்; ஆனால், குருநாம் சிங், சட்டமன்ற முடிவு தெரிகின்ற வரையில் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க விரும்பவில்லை; சட்டமன்றத்தில் பெரும்பான்மையை உருவாக்கக் காங்கிரசுக் கட்சி கையாண்டுவருகின்ற இழிமுறைகளைக் கையாளவும் அவர் விரும்பவில்லை; கண்ணியமாக, ஆட்சிப் பொறுப்பிலிருந்து அவர் விலகிவிட்டார்.

அமைச்சரவையைத் துறந்துவிட்ட குருநாம் சிங், 'சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறுதேர்தல் நடத்த வேண்டும்' என்ற யோசனையை ஆளுநருக்கு அறிவித்தார். பொறுப்பைத் துறக்கின்ற முதலமைச்சர் கூறக்கூடிய யோசனையைச் சீர்தூக்கிப் பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் ஆளுநரின் கடமை; அந்தக் கடமையை, ஆளுநர் நிறைவேற்றத் தவறிவிட்டார்.

கூட்டு அமைச்சரவையிலிருந்து பதினேழு உறுப்பினர்களுடன் வெளியேறிய கல்வியமைச்சர் இலட்சுமண சிங் என்பவரை, அமைச்சரவை அமைக்கும்படி ஆளுநர் கோரினார்; அவரும், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களின் ஆதரவை நம்பி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டார். வங்காளத்தைப் போன்றே பஞ்சாபிலும், காங்கிரசு ஆதிக்கத்துக்குட்பட்ட—பெயரளவுக்குக் காங்கிரசல்லாத அமைச்சரவை அமைந்திருக்கிறது.

காங்கிரசுத் தலைமை கடைபிடித்துவரும் இந்தத் திருப்பணி, மக்களாட்சி முறையை வாழ வைக்காது; சனநாயகத்தைத் தழைத்திடச் செய்யாது; அதற்கு மாறாக, சனநாயகத்தைச் சீரழித்து, மக்களாட்சி முறையைக் குழிதோண்டி புதைக்கவே வழி வகுக்கும். இதை, 'காங்கிரசுக் கட்சியின் புதிய முறை சனநாயகக் கோட்பாடு' என்றுதான் தீர்மானிக்க வேண்டும்.

—கா. க.

சந்தடிகளுக்கிடையில் இந்திரா தலைவராவார்?

"வங்காளத்து நிலைமை—மொழி மசோதா தாக்கல் ஆகிய இரண்டு முக்கிய நேரங்களுக்கிடையில் சந்திக்கும் இந்திராவுக் — காமராசரும், காங்கிரசுத் தலைவரொருவரைப் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கும் முயற்சியில் வெற்றி பெற முடியாது"

என்று, புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன!

மற்றப் பிரச்சினைகளின் அழுத்தம் காரணமாகவும், காங்கிரசிலேயே உள்ள நிலைமைகளைச் சமாளிக்கும் வகையிலும், இந்திராவையே கட்சித் தலைவர் பதவியிலும் இருக்கும்படிக் கோருவதற்குச் சில மேலிடத் தலைவர்கள் முயலுவதாகக் கூறப்படுகிறது!

ஜெய்ப்பூர் மாநாட்டில் அறிஞர் அண்ணா

ஜெய்ப்பூரில் டிசம்பர் திங்கள் இறுதியில் நடக்கவிருக்கும் இராஜஸ்தானி மொழி மாநாட்டை தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைக்க இசைந்துள்ளார்கள்.

இந்தியை எதிர்த்தும், இராஜஸ்தானி மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் இயக்கம் நடத்துவோர் இந்த மாநாட்டை நடத்துகின்றனர். இந்த இயக்கத்தின் தலைவர் பிக்கானீர் மன்னர் கர்னிசிங் ஆவார்.

இந்திரா காந்தி கலந்துகொண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள்

செலவை ஏற்கத் தமிழ்நாடு காங்கிரசு நிபந்தனை

எதிர்க் கட்சித் தலைவரின் கோரிக்கைக்கு அண்ணா அளித்த பதில்

சென்னை, நவ. 28—

இன்று சட்டமன்றக் கேள்வி நேரம் முடிந்ததும், எதிர்க் கட்சித் தலைவர் திரு பி. ஜி. கருத்திருமன் எழுந்து, ஒரு விளக்கமளித்தார்; அது வருமாறு:—

"பொதுத் தேர்தல் நேரத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் தமிழகத்துக்கு வந்தபோது ஏற்பட்ட செலவினத்தைக் கொடுக்குமாறு தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டியிடம கோரியிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அப்போது தலைமையமைச்சருக்குப் பாதுகாப்புக்காக ஏற்பட்ட செலவினத்தை நீக்கிவிட்டு, மேடை அமைப்பு—விளக்கு—ஒலிபெருக்கி முதலானவற்றிற்கு மட்டும் ஏற்பட்ட நியாயமான செலவைக் கணக்கிட்டு அறிவித்தால், அதைச் செலுத்திவிடத் தமிழ நாடு காங்கிரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி அரசாங்கத் தலைமைச் செயலாளரிடமிருந்து தகவல் எதிர்பார்க்கிறோம்; அது கிடைத்ததும், அந்த நியாயமான செலவை ஏற்றுக்கொள்கிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்."

அண்ணா:—"கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், 'நியாயமான செலவு' என்று குறிப்பிட்டார்கள். 'நியாயமான செலவு' என்பதைவிட, 'தேர்தலுக்காக மட்டுமே தொடர்புடைய செலவு' என்று சொல்லலாம்.

"மேடையமைப்பு-விளக்கு-ஒலிபெருக்கி ஆகியவை பயன்படுத்தப்பட்டதற்கான செலவைஏற்பதாகவும் பாதுகாப்புச் செலவை நீக்கிவிடும்படியும் கோருகிறார். அவர்கள் கட்சி பெரிய கட்சி—நிறைய பணம் வைத்திருக்கும் கட்சி; பெரிய பெரிய முதலாளிகளெல்லாம் நிறையப் பணம் கொடுத்ததாக அவர்களே அறிக்கைகூட வெளியிட்டிருக்கிறார்கள்; எனவே, தாராளமாக அவர்கள் கொடுக்கலாம்.

"பாதுகாப்புச் செலவை நீக்க வேண்டும் என்று அவர்கள் கோரியிருப்பதால் அதுபற்றி நான் தலைமைச் செயலாளரிடம் விவாதிக்க இருக்கிறேன்; என்றாலும், அவர்கள் பணம் கொடுப்பார்கள் என்பதிலே எனக்கு நம்பிக்கை உண்டு"

சட்டமன்ற உறுப்பினர்கட்கு இலவச பஸ் பயணம்

காங்கிரசு உறுப்பினரின் கோரிக்கை-அண்ணா பதில்

சென்னை, நவ. 28—

"சட்டமன்ற உறுப்பினர்கட்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுமா?"

என்று இன்று சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, அமைச்சர் கருணாநிதி பதிலளிக்கையில், 'அவர்களிடம் அதிகக் கட்டணம் கேட்காமலிருப்பதற்காக அங்கத்தினர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்' என்றார்.

கே. விநாயகம்:—"கேரள மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கட்கு இலவச 'பாஸ்' கொடுப்பதாகக் கூறப்படுகிறதே—அதே போல், நமது மாநிலத்திலும் நமது அரசாங்க பஸ்களில் இலவச 'பாஸ்' கொடுக்கக் கூடாதா?"

அண்ணா (குறுக்கிட்டு):—"நமது சட்டமன்ற உறுப்பினர்கட்கு இரயில்வே பாஸ் கொடுக்குமாறு இரயில்வே அமைச்சரைக் கேட்டிருக்கிறோம்; அதை வாங்கிக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்."

விநாயகம்:—"இரயில்வே பாஸ் வாங்கிக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதற்காக நன்றி; அது, மத்திய அரசாங்கத்திடம் கேட்கப்படவேண்டியது; இந்த அரசாங்கத்தின் சக்திக்கு உட்பட்ட பஸ் பாஸ் வழங்க அனுமதிக்கப்படுமா?"

அண்ணா:— "வேறு இரண்டு மாநிலங்களில்கூட இப்படி இரயில்வே பாஸ் கொடுத்திருக்கிறார்கள்; எனவே, நமக்கும் அவர்கள் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது."

பி. ஜி. கருத்திருமன்:—"இரயில்வே அமைச்சர் திரு. பூனச்சாவிடம் நானும் பேசிக்கொண்டிருந்தேன்; அப்போது, இரயில்வே பாஸ் கொடுப்பது பற்றி நமது முதலமைச்சர் கேட்டதற்கு, ஆவன செய்வதாகக் கூறினார்; இரயில்வே பாஸ் கொடுத்தால், பஸ்சிலும் இலவச பாஸ் கொடுப்பது பற்றி முதலமைச்சர் யோசிப்பதாகச் சொன்னார்."

அண்ணா:—"இதைப்பற்றி கனம் அங்கத்தினரிடம் (விநாயகத்திடம்) ஓர் ஐந்து நிமிட நேரம் பேசும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்."

மதிய உணவு திட்டத்தில் 'காஞ்சி' காட்டும் வழி!

சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா பெருமிதத்துடன் அறிவிப்பு

பொதுநலத்தில் அக்கறை கொண்ட உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டுகோள்

சென்னை, நவ. 27—

சட்டமன்றத்தில், மதிய உணவுத் திட்டத்திற்கு அரசு வழங்கும் உதவித் தொகையை உயர்த்தக் கோரிப் பல உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்குக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளிக்கையில், 'அரசு கொடுக்கும் உதவித் தொகையுடன் அமெரிக்க கேர் நிறுவனம் அளிக்கும் உதவியையும் சேர்த்தால் தலா 10 காசு ஆகிறது' என்றும், 'பொதுமக்களிடம் நன்கொடை வசூலித்தால் செலவைச் சரிக்கட்ட முடியும்' என்றும், 'இதற்கு மேல் நிதி ஒதுக்க அரசின் நிதி நிலைமை இடங்கொடுக்கவில்லை' என்றும் விளக்கமளித்தார்.

கும்பகோணம் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. காசிராமன், தமது கேள்வியில், 'மதிய உணவுக்காக தலா 11 காசு அளவுக்குத் தேவைப்படுகிறது; ஆனால் 6 காசுதான் கொடுக்கப் படுகிறது' என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிக்கிட்டுப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"மதிய உணவுத் திட்டத்துக்காக அரசு மானியமும், பஞ்சாயத்துக்களின் நிதியும் மட்டுமே போதாது என்று கூறப்படுகிறது. கும்பகோணம் உறுப்பினரைப் போன்றவர்கள் இதற்கு உதவலாம்; பொது நலத் தொண்டர்கள், இதற்சென நேரத்தை ஒதுக்கி ஆவன செய்யலாம்.

"பூவிருந்தவல்லியில் அமெரிக்க நிறுவனத்தின உதவிகொண்டு மதிய உணவுத் திட்டம் செம்மையாக நடத்தப்படுவது பற்றிக் கல்வியமைச்சர் கூறினர்; எங்கள் காஞ்சிபுரத்தில் பொதுமக்கள் தொடர்புடைய ஒரு தலைவர், ஐந்து ஏக்கர் நிலத்தையே கொடுத்து உதவியிருக்கிறார்; இதற்கென ஒரு குழுவே அமைத்து செயல்படுத்திவருகிறேம். தனி இடத்தில் சமையல் செய்து, ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியான— விரைவில் சூடு ஆருக பாத்திரத்தில் வைத்து அனுப்பப்படுகிறது; காஞ்சியில் நடத்தப்படுவதைப் போல திருத்தணியிலும் (வினயகம் தொகுதி) முயற்சி எடுத்துக்கொண்டால் முடியும்."

சித்தன் (காங்):—"பாடப் புத்தகங்களை அரசே வெளியிடுவதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை, மதிய உணவுத் திட்டத்துக்குப் பயன்படுத்தலாமே!"

அண்ணா:— "தனிப்பட்டவர்கள் பாடப் புத்தகம் வெளியிடுவதில் அதிக இலாபமடிக்கிறார்கள் என்பதற்காகத்தான், அந்தப் பணியை அரசு மேற்கொண்டது. அதேபோல நாமும் செய்ய இந்த அவையினர் அனுமதித்தால், அதுபற்றி யோசிக்கலாம்."

பீர் முகம்மது:—"சீரணிப் படையினர் மூலம் இந்தப் பணியைச் செம்மையாகச் செய்விக்க இயலுமல்லவா?"

அண்ணா:—"சீரணி செம்மையாகச் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான், பணத்துக்கும்—அவர்கட்கும் சம்பந்தமில்லாமல் வைத்திருக்கிறேன்."

சீமைச்சாமி:— "காஞ்சியிலே மதிய உணவுத் திட்டத்துக்காக நிலம் வழங்கிய பெரியார் யார் என்பதை முதலமைச்சர் தெரிவிப்பாரா?"

அண்ணா:—"முன்னாள் மேலவை உறுப்பினரும் காஞ்சி நகராட்சி மன்றத்தின் தலைவராக இப்போது இருப்பவருமான திரு. அ. க. தங்கவேலர் ஆவார்."

மீண்டும் ஓடும் திண்டிவனம் பஸ்

அமைச்சர் விளக்கம்

சென்னை, நவ 27—

"சென்னைக்கும் — திண்டிவனத்துக்கும் இடையில் 1-10 65ல் விடப்பட்ட அரசு பஸ், 8—11—65-ல் நிறுத்தப்பட்டது; போதுமான பிரயாணிகள் இல்லாத காரணத்தாலேயே நிறுத்தப்பட்டதாகக் காரணம் காட்டப்பட்டது; இப்போது அந்தப் பஸ் மீண்டும் விடப்பட்டிருக்கிறது"

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்டமன்றத்தில், கே விநாயகம் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கே. விநாயகம்:—"இந்தப் பஸ் ஓடுவதால் இப்போது இலாபமா? நஷ்டமா?'

அமைச்சர்:—"இலாப—நஷ்டக் கணக்குப் பார்க்கப்படவில்லை; ஆனால் நஷ்டம் என்று கூறமுடியாது."

கேள்வி:—"திண்டிவனத்தில் அரசு பஸ் நிலையம் கட்டும் உத்தேசம் உண்டா?"

பதில்:—"அரசு சார்பில் கட்டப்படும் பஸ் நிலையத்துக்கும்—நகராட்சியின் பஸ் நிலையத்துக்கும் அதிகத் தொலைவு இல்லாமல் இருக்கும்படியாக இடம் ஏற்பாடு செய்யுமாறு கூறப்பட்டிருக்கிறது; தொடர்புடையவர்களிடமிருந்து உரிய தகவல்கள் கிடைத்ததும் ஆவன செய்யப்படும்."

வி. முனுசாமி:—"செஞ்சிக்கும்—திருவண்ணாமலைக்கும் அரசு பஸ் விடப்படுமா?"

பதில்:—"உரிய நேரத்தில் கவனிக்கப்படும்."

வலியா? ஜலதோஷமா?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானல் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானல், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம்
கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.
am-3769

காங்கிரசு குண்டர்களால் கழகத் தோழர் தாக்கப்பட்டார்

நேரு பிறந்த நாள் பெயரால் காலித்தனம்

கரூர், நவ. 20—

இன்று இரவு 8-மணியளவில் கரூர் 15-வது வட்டத்தில், 'நேரு பிறந்த நாள் விழா' என்ற பெயரால் காங்கிரசுப் பொதுக்கூட்டம் ஒன்று நடந்துகொண்டிருந்தது. ஒரு பெண் பேச்சாளர் அந்தக் கூட்டத்தில் அண்ணா அவர்களையும், கழகத் தலைவர்களையும் வாய்க்கு வந்தபடி மட்டரகமாகத் தாக்கிப் பேசிக்கொண்டிருந்தாராம்; அங்கிருந்த கழகத் தோழர் இராமலிங்கம், 'நேரு பிறந்த நாள் விழா என்று கூட்டம் போட்டுக் கொண்டு இப்படி உண்மைக்கு மாருகவும், கீழ்த்தரமாகவும் பேசுவது முறையா?' என்று அருகில் இருந்தவர்களிடம் கூறினராம்; உடனே பல காங்கிரசுக் காலிகள் அவரைச் சூழ்ந்துகொண்டு கடுமையாகத் தாக்கி மேடைக்கு இழுத்துச் செல்ல முற்பட்டனராம்; உடனே கூட்டத்தில் இருந்த போலீசார் ஓடிவந்து, தோழர் இராமலிங்கத்தைக் காப்பாற்றி அழைத்துச் சென்று அரசினர் மருத்துவமனையில் சேர்த்தனர்.

தாக்கிய காங்கிரசுக் குண்டர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் போலீசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

தாக்கிய குண்டர்கள் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

வங்கத்தில் நடைபெறும் தமிழ்ப் பள்ளி

கட்டிட நிதிக்குக் கலை நிகழ்ச்சி

வங்கத் தமிழர் சங்கம் நடத்தும் இலவசத் தமிழ்த் தொடக்கப் பள்ளியின் கட்டிட நிதிக்காக டிச. 9, 10 ஆகிய நாட்களில், கல்கத்தாவில் உள்ள தியாகராசா மன்றத்தில், தமிழக திரைப்படப் பலகுரல் இசைக் கலைஞர் டி. எஸ். சாரங்கபாணி—பிரேமா குழுவினர் திரைப்பட இசை விருந்தளிக்கின்றனர்.

வடநாட்டில் உள்ள தமிழ் இலக்கிய — கலாச்சார சங்கங்களில் வங்கத் தமிழர் சங்கம்தான் இலவசத் தமிழ்த் தொடக்கப் பள்ளி நடத்திவருகின்றது. மேலும் பள்ளிச் சிறுர்கள் அனைவருக்கும் இலவச சீருடைகள், புத்தகங்கள், நோட்டுகள், வாய்ப்பாடு, சிலேட்டு மற்றும் எழுது பொருட்களும் அளிக்கப்படுகின்றன.

நன்கொடை அனுப்ப விரும்புபவர்கள், 'வங்கத் தமிழர் சங்கம், 506, ஜி. டி. ரோடு, ஹவுரா-1' என்ற முகவரிக்கு அனுப்புமாறு வங்கத் தமிழர் சங்கத் தலைவர் டி. என். தங்கதுரை தெரிவிக்கின்றார்.

'ஆட்சி மொழி மசோதா — ஒரு குழப்பமான தயாரிப்பே'

இராஜாஜி கருத்து

"ஆங்கிலத்தை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்படும் வரையில், இந்தியா ஒரே நாடாக இருப்பது முடியாத காரியம்; இப்போது கொண்டு வரப்பட்டுள்ள மசோதா, இந்தியாவை, 'இந்திப் பிரதேசம்'—'இந்திப் பேசாத பிரதேசம்' என்று இரு கூறுகளாகப் பிரிக்கிறது!

"மத்திய அரசின் நிர்வாகச் செயலகம் தயாரித்திருக்கும் ஒரு குழப்பமான சட்டமே இத்திருத்த மசோதா!"

என புதுடில்லியில், செய்தியாளர்களிடையே பேசுகையில், இராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார்.

நேற்று மாலை கழக உறுப்பினர் ;க. இராசாராம் அவர்களிடமும் இராஜாஜி அவர்கள், மொழி மசோதா பற்றி கருத்தைத் தெரிவித்து, அதை நவ. 30-ந் தேதியன்று, புதுடில்லிக்கு வருகைதரும் அண்ணா அவர்களிடமும் கூறுமாறு கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மலைக் கோவிலூர் கிளையின் தலைவராகத் தோழர் பரமத்தி சண்முகம் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; மற்றும் கீழ்க்கண்டவாறு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

துணைத் தலைவர்: என். அம்பலவாணன்; செயலாளர்: என். எஸ். நாச்சிமுத்து; துணைச் செயலாளர்: கே. வி. சுப்பையா; பொருளாளர்: வி. சண்முகம்; செயற்குழு உறுப்பினர்கள்: பி. சுப்பிரமணியம், பி. கரூர்சாமி, ஏஸ். மனோகரன், கே. இராமசாமி.

சென்னை 97-வது வட்ட அண்ணா மன்றம்

சென்னை 97-வது வட்டம் அண்ணா மன்ற நிர்வாகிகள் தேர்தல், 18—11—67-ல், தோழர் சு. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

மன்றத் தலைவராக சி. முனுசாமி; செயலாளராக சுந்தரமூர்த்தி; துணைச்செயலாளராக பூ. கன்னியப்பன்; பொருளாளராக ந. செல்வன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

காவியத்துச் சீதா பிராட்டிக்குப் பக்கபலமாகப் பேசும் பொருட்டு,

"கஷ்டத்திலும் நட்டத்திலும் இன்பம் காண்பதுதான் இலட்சிய வாழ்க்கை ஆகும்"

என்று கூறிய கருத்திருமனின் 'கஷ்ட'த்திலும், 'நஷ்ட'த்திலும் 'இன்பம்' கண்டு, தமிழகச் சட்ட மன்றம் நேற்றையத்தினம், சுயமரியாதைத் திரு மண மசோதாவினை நிறைவேற்றியிருக்கிறது!

இந்த மசோதாவினையும் சேர்த்து நேற்று மட்டும் எட்டு மசோதாக்கள் சட்டமாகியுள்ளன!

விற்பனை வரி—நகராட்சி—நிலச் சீர்திருத்தம் ஆகியவை போன்ற மற்ற மசோதாக்களைக் காட்டிலும், சுயமரியாதைத் திருமணத் திருத்த மசோதா மட்டும்—அரசியல் வரம்பு கடந்து—சிரிப்பொலிகளுக்கிடையேயும், வேடிக்கை வாதங்களுக்கு மத்தியிலும் பயணம் செய்திருக்கிறது!

வாலிப வயதுடையவர்கள்தான், திருமணத்தைப் பற்றிப் பேச வெட்கப்படுவார்கள்! ஆனால், வயதுவந்தவர்களோ ஆசைப்படுவார்கள்!

கட்சி முகாந்திரமே தெரியாத அளவுக்கு—மற்றைய சீர்திருத்தக் கருத்துக்களை வன்மையாக எதிர்ப்பவர்கள்கூட, இந்தச் சுயமரியாதைத் திருமண மசோதாவுக்கு உளப்பூர்வமான வரவேற்பைக் கொடுத்திருப்பதனைப் பார்க்கும்போது, 'இச்சட்டத்தை ஏன் காங்கிரசு அரசு முன்பே செய்திருக்கக்கூடாது' என்று கேட்கத்தான் தோன்றுகிறது! இப்போது கிடைத்திருக்கும் இத்தகைய அரசியல் வரம்புகடந்த மதிப்பு, அப்போதும் கிடைத்திருக்கும்! ஆனால், காங்கிரசின் 'அரசியல் மனப்பான்மை'தான் அதற்கு இடம் தரவில்லைபோலும்!

'தாலி கட்டுதல்' என்ற சொற்றொடரில் இருக்கும் 'கட்டுதல்' என்ற வார்த்தைக்குக்கூட எதிர்ப்புத் தெரிவித்து, அது, பெண்களின் தன்மான உணர்வுக்குக் குறை தருவதாகக் கூறும் மகாதேவன் போன்றவர்கள் இருக்கும் காங்கிரசுக் கட்சியில் போதிய மனப்பக்குவம் இல்லாததே இத்தகைய சீர்திருத்தங்கள் இருபதாண்டு நிர்வாகத்திலும் தோன்ருததற்குக் காரணமாக இருக்கமுடியும்!

வந்துள்ள சட்டம், ஏற்கனவே உள்ள முறைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகவோ, அவைகளை அழித்துவிடும் நோக்கத்துடனே இருக்கவில்லை; மாருக, 'இதுவரை சட்ட ரீதியான பாதுகாப்பு இல்லாத சுயமரியாதைத் திருமணங்களுக்கு, சட்டபூர்வமான தகுதியைத் தருவதுதான்' என்ற விளக்கத்தினை, அமைச்சர் மாதவன் மீண்டும் வலியுறுத்தியிருப்பது, இதுபற்றி வீணை அச்சம் கொண்டவர்களுக்குத் தெளிவினைக் கொடுப்பதாக இருக்கிறது!

பத்திரிகைகள் சில, 'ஆண்டின் சிறந்த மனிதர்' போன்ற பல முடிவுகளை, பன்னிரண்டு திங்களுக்கு ஒரு முறை வெளியிடும்; அதுபோல் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரின் கேள்வி நேரத்தில், அண்ணா அவர்கள் தந்துள்ள கீழ்க்கண்ட பதிலை, தலைசிறந்த ஒன்ருகக் கருதலாம்:—

"கே. விநாயகம் (காங்):—" தமிழக அரசாங்கப் பஸ்களில் எழுதப்பட்டுள்ள திருக்குறள்கள் யாருக்காக? பஸ் டிரைவர், கண்டக்டர்களுக்கா? பிரயாணிகளுக்கா? 'யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்—சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு' என்ற குறள் உள்ளது; இது யாருக்காக?"

முதலமைச்சர்:—" நாக்கு உள்ள எல்லோருக்கும்தான்!"

காங்கிரசு உறுப்பினர் விநாயகத்திடமிருந்து மேற்கொண்டு குறுக்கீடுகள் ஏதும் இருந்ததாகப் பத்திரிகைச் செய்திகள் கூறவில்லை!

இதற்கு முன்னதாக கழக உறுப்பினர் எம். எஸ். மணி அவர்கள் கேட்ட—

"'குறள் எழுதியதால் பஸ் விபத்து ஏற்பட்டது' என்று சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியதாகக் கேள்விப்பட்டேன்; உண்மையா?"

என்ற கேள்விக்குப் பொதுப் பணி அமைச்சர் கருணாநிதி தந்திருக்கும்—

"விபத்துக்கள் ஏற்பட்டது உண்மை; ஆனால் குறளால் ஏற்படவில்லை; அப்படி யாராவது சொன்னால், அது, அவர்களுக்கு ஏற்பட்ட விபத்து என்றுதான் கருத வேண்டும்"

என்ற பதிலை, அண்ணாவின் 'குறள் விளக்கத்'துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை நிலை புரியும்!

வயதைக் குறைத்துச் சொல்வதற்காக இடுப்பில் ஏற்றிக்கொள்ளப்பட்ட 'பிள்ளை', வயதுக்கு மீறியனவற்றைப் பேசி உண்மையை அம்பலப்படுத்திவிடுவது வாடிக்கை!

"மத்திய அரசு, வேறு இரு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச இரயில் வசதி தந்திருக்கிறது; அதுபற்றி மேலும் தகவல் தெரிந்து, தமிழக உறுப்பினர்களுக்கும் அதுபோன்று கிடைக்க வழி செய்கிறேன்"

என்று கூறிய அண்ணாவின் பதிலில் திருப்தியடையாத காங்கிரசு உறுப்பினர் விநாயகத்துக்கு, கடைசியில் அவரது கட்சித் தலைவரே 'எதிரி'யாக வந்து நின்றிருக்கிருர்!

"ஆமாம்; இரயில்வே அமைச்சர் பூனச்சாவிடம் நானும் பேசினேன்; இலவசப் பாஸ் தருவது பற்றி யோசிப்பதாகச் சொல்லியிருக்கிருர்" என்று கருத்திருமன் ஒப்புக்கொண்ட பின்னர், அண்ணா அவர்களின் வேலை, பாதியாகக் குறைந்திருக்கிறது!

"கருத்திருமன் அவர்கள், தமது சக உறுப்பினருடன் ஓர் ஐந்து நிமிடம் பேசுவது நல்லது" என்று விநாயகத்தை, எதிர்க் கட்சித் தலைவரிடம் ஒப்படைத்திருக்கிருர் அண்ணா!

'கோவைக் கம்பர்' எனப் பாராட்டப்படும் கருத்திருமன், 'கண்டேன் சீதையை' என்ற வரியிலுள்ள காவியக் கம்பனின் கவிதை நயத்தினை அறியாதவரல்லர்!

தலைமையமைச்சர் இந்திரா, காங்கிரசு நிர்வாகம் இருந்தபோது தமிழகத்திற்கு வந்துபோன செலவுகள் பற்றி—கேள்வி நேரம் முடிந்தவுடன்—தனி விளக்கம் கொடுத்திருக்கும் கருத்திருமன்,

"பாதுகாப்புச் செலவுகள் போக எஞ்சிய நியாயமான செலவுகளைத் தமிழ்நாடு காங்கிரசு கொடுக்கும்"

என அறிவித்திருப்பதில் இருந்த 'வார்த்தை சாமர்த்திய'த்தினை, உடன் அண்ணா அவர்கள் அம்பலப்படுத்தியிருக்கிருர்கள்!

"'பாதுகாப்புச் செலவு நீங்கலாக' என்பதற்குப் பதில், 'தேர்தல் பிரசாரத்துக்கான செலவுகள்கள் மட்டும்' என்று எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கலாம்"

என்று முதலமைச்சர் தந்துள்ள 'சிறு திருத்தம்', கருத்திருமனின் வாதத் திறமையைத் தற்காலிகமாக்கிவிட்டிருக்கிறது!

கடைக்கு பத்து ரூபாய் எடுத்துச் சென்று, எட்டு ரூபாயைச் செலவழித்துவிட்டு வந்திருக்கும் நிலையில்—அதைக் கூறுவதற்குப் பதில்—'இரண்டு ரூபாய் மீதி இருக்கிறது' என்று கூறிப் பெருமைப்படுவதில் பொருத்தம் இருக்காதுதான்!

கழக உறுப்பினர்களுக்குக்கூட கிடைக்காத ஒரு பெருமையை, காங்கிரசு உறுப்பினர் விநாயகத்திற்கு அண்ணா அவர்கள் அளித்திருக்கிருர்! சாதாரண விநாயகமாக இருந்த அவரை, நேற்று முதலமைச்சர் அவர்கள், 'கேள்வி விநாயக'மாக மாற்றியிருக்கிருர்!

ஒரு கேள்வியைக்கொண்டு மேலும் பல துணைக் கேள்விகள் கேட்பதற்குக் கையை உயர்த்திய அவர்மீது கழக உறுப்பினர் ஒருவர், 'புகார்' கூற—அதற்குச் சட்டமன்ற அவைத் தலைவர், 'ஒருவர், ஒரு கேள்வி கேட்பதற்குத்தான் அனுமதிக்கப்படுவார்' என நிலைமையைத் தெரிவிக்க, இடையில் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு,

"அங்கத்தினரின் பெயரிலேயே 'வினா' இருப்பதால், அவர் எவ்வளவு வினாக்களை வேண்டுமானாலும் கேட்கலாம்"

என்று பெயர்ப் பொருத்தம் கண்டிருக்கிருர்!

சட்டமன்றத்தின் இக்கூட்டத் தொடரில், விநாயகம், பிள்ளையார் மறக்கப்படும் அளவுக்கு 'வினா'யகமாகத்தான் மாறியிருக்கிருர்!

சட்டமன்ற மேலவையில்....!

மின்சார நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நேற்றுடன் மேலவையிலும் முடிந்திருக்கிறது.

"கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு மின்சார வசதிக்காகத் தரப்படும் உதவித் தொகைகள் சரிவர பயன்படுத்தப்படுகிறதா என்ற ஒரு விஷயத்தில் மட்டும் அரசு உன்னிப்பாகக் கவனம் செலுத்தினால், மின்சார போர்டின்மீது சுமத்தப்படும் பாதி குறைபாடுகள் குறையும்"

என கழக உறுப்பினர் சி. வி. இராசகோபால் தந்துள்ள கருத்து, கவனிக்கவேண்டியது மட்டுமல்ல—ஏற்றுப் பரிசீலிக்க வேண்டியதும்கூட!

இங்கே மின்சாரக் கட்டண உயர்வுக்குக் கண்டனம் எழுப்பும் காங்கிரசு மற்றும் சில அமைப்புக்களின் தலைவர்கள் மனதில் பதியும்படி, தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மத்திய அரசு நெய்வேலி மின்சாரத்துக்கான விலையைக் குறைக்காமல் 'கெடுபிடி' காட்டும் தன்மையை மீண்டும் மேலவையில் விளக்கியிருப்பது, புதுடில்லிக்கும் சேர்த்துத்தான்!

சட்டமன்றத்துக்கு வெளியே....!

நேற்று மாலை—அலுவல் நேரத்துக்குப் பின்—சட்டமன்றம் பற்றிய ஒரு முக்கிய நிகழ்ச்சி, சட்டமன்றத்துக்கு வெளியே நடந்திருக்கிறது!

சட்டமன்றப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனர், மிகக் குறுகிய காலத்தில்—சிரமமான ஒரு செயலை—அனைவரும் வியந்து பாராட்டும் வகையில் செய்து முடித்திருக்கிருர்!

அவர் எழுதி, அண்ணா அவர்களால் வெளியிடப்பட்டுள்ள 'சட்டப் பேரவை விதிகள்' புத்தகம் பற்றிய செய்தியையும், 'போகாத நிருபர்', இப்பகுதியில்—பத்திரிகை மூலம்தான் திரட்டித் தருகிருர்!

காங்கிரசு உறுப்பினர் விநாயகம் மனமுவந்து பாராட்டியிருப்பதனைப்போல், ஆதித்தனரின் சட்டமன்ற சாதனைப் பட்டியல்களுக்கு இந்நூல் மேலும் ஒரு மெருகூட்டும் சேர்க்கை!

அண்ணா அவர்கள் மிக அழகாகச் சுட்டிக் காட்டியிருப்பது போல், தமிழகம் அவரது இந்த அரிய முயற்சிக்குக் கடமைப்பட்டிருக்கிறது!

உடலும் உள்ளமும் பூரிக்க—குறள் மணத்துடன் அவை நடவடிக்கைகளைத் துவக்கும் சட்டமன்றத் தலைவர், இந்தப் புத்தகத்தின்மூலம் 'தமிழால் முடியும்' என்ற கோட்பாட்டுக்கு மேலும் வலிவு தேடித் தந்துள்ளார்.

வினாவை உள்ளடக்கிய விநாயகம்!

சட்டமன்றத்தில்

அண்ணா நகைச்சுவை!

சென்னை, நவ. 28—

இன்று சட்டமன்றத்தில், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. கே. விநாயகம், ஒரே நேரத்தில் தொடர்ந்து பல கேள்விகளைத் தொகுத்து ஒரே கேள்வியாகக் கேட்டார்.

அப்போது, பி. சோ. கட்சியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் எழுந்து, 'ஓர் உறுப்பினர், ஒரு தடவையில் எத்தனைக் கேள்விகளைக் கேட்கலாம்?' என்று அவைத் தலைவரைப் பார்த்துக் கேட்டார்.

அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து, 'விநாயகம் என்ற அவருடைய பெயரிலேயே வினா இருப்பதால், அவர் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள். (அவை சிரிப்பில் ஆழ்ந்தது)

தமிழகத்தில் அரசு வழக்குரைஞர்கள்

சென்னை, நவ. 28—

"இம்மாநிலத்தில் அரசாங்க சிவில் வழக்குரைஞர்கள் 11 பேரும், கிரிமினல் வழக்குரைஞர்கள் 11 பேரும், இரு துறை வழக்குரைஞர்களாக உள்ளோர் 4 பேர்களும், உதவி வழக்குரைஞர்கள் 106 பேர்களும் உள்ளனர்.

"அரசு வழக்குரைஞர்கள் நடத்துகின்ற வழக்குகளுக்கெனக் கட்டணம் அளிக்கப்படுகிறது. வழக்குரைஞர் கட்டணங்களை முறைப்படுத்துகின்ற நிலை ஆணைகள், வழக்குரைஞர் கட்டண விதிகள் ஆகியவற்றின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களில் அக்கட்டணங்கள் அளிக்கப்படுகின்றன. உதவி வழக்குரைஞர்கள் மட்டுமே முழு நேர ஊழியர்களாக உள்ளனர். அவர்களுக்கு மட்டுமே மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது."

இத்தகவல், சட்ட அமைச்சர் மாதவன் அவர்களால், சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டது.

தாடி வைத்துள்ள உறுப்பினரின் மனக்குறை

சென்னை, நவ. 28—

இன்று சட்டமன்றத்தில் முன் வரிசையில் இருந்த உறுப்பினர்களே அடிக்கடி கேட்கும் வாய்ப்பைப் பெற்றதால், மூன்ருவது வரிசையில் இருந்த திரு. கே. பி. எஸ். மணி எழுந்து, 'நானும், எனது பக்கத்தில் உள்ள உறுப்பினரும் (பீர் முகம்மது) நீண்ட தாடி வைத்துக்கொண்டிருக்கிறோம்; இருந்தாலும், எங்களுக்குக் கேள்வி கேட்கும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை; உங்கள் கவனத்தை ஈர்க்க நாங்கள் வேறு என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறோம்' என்று அவைத் தலைவரைப் பார்த்துக் கேட்டதும் அவையினர் சிரிப்பில் மூழ்கினர்!

சென்னை 44-வது வட்டத்தில்
30-11-67 இரவு 7-மணிக்கு
அமைப்புச் செயலாளர்
என். வி. நடராசன்
எம்.எல்.சி. தலைமையில்
மாநகராட்சி நாடகக் குழுவினர்
நடிக்கும்
'மறக்காதே'
என்ற நகைச்சுவை நாடகம்
நடைபெறும்.
கதை, வசனம், பயிற்சி:
எஸ். ஏ. இராசாராம்
அமைப்பாளர்:
வேலூர் நாராயணன்

உணவு உற்பத்திக்கு மின்சாரச் சலுகை

திட்டம் பரிசீலனையில் இல்லை

சென்னை, நவ. 28—

"உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்குக் கட்டணத்தைப் பாதியாகக் குறைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை"

என்று, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

"பிற மாவட்டங்களுக்கு அரிசி வழங்கும் தஞ்சை மாவட்டத்துக்கு மட்டிலுமாவது இந்தச் சலுகை வழங்கப்படுமா?"

என்று திரு. என். கிட்டப்பா கேட்டதற்கு, 'சலுகை என்பது ஒரு மாவட்டத்துக்கு மட்டும் வழங்குவது சரியாகாது; தஞ்சை மாவட்டம் மற்ற மாவட்டங்களைப்போல் இறைவைப் பாசனம் உள்ளது அல்ல' என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

குடியேற்றம் கல்லூரியில் தெலுங்கு வகுப்பு

சென்னை, நவ. 28—

தமிழக — ஆந்திர எல்லையை ஒட்டி அமைந்துள்ள குடியேற்றம் வட்டத்தில் தெலுங்கு படித்து எஸ்.எஸ்.எல்.சி. தேறிய மாணவர்களின் வசதியை முன்னிட்டு, நடப்புக் கல்வியாண்டில் குடியேற்றம் கல்லூரியில் தெலுங்கு வகுப்பு ஒன்றைத் துவக்கியுள்ளதாகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

ரெவினியூ அல்லாததுறைகளில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்!

சென்னை, நவ. 28—

"ரெவினியூ இலாகா அல்லாத பிற இலாகாக்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டிய 46 இடங்களில் 43 இடங்களுக்கு நியமிக்கப்பட்டுவிட்டனர்; ஐந்து இடங்கள் மட்டும் நிர்வாக காரியத்தை முன்னிட்டு இன்றும் நிரப்பப்படவில்லை"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

நன்னிலம் அ.நடராசன்

சுற்றுப்பயணம்

டிச. 1: சீர்காழி; 2, 3: ஈரோடு தொகுதி; 4, 5: தொட்டியம் தொகுதி; 6: துறையூர்; 7, 8: சென்னை; 9: நன்னிலம் தொகுதி; 10: சிவகெங்கை; 11: தஞ்சாவூர்; 12-முதல் 18-வரை சங்கரி; 20: சேலம்; 22: உடுமலை; 23, 24: கோவை; 25: உதகை; 27: கொமாரலிங்கம்; 29: பேரளம்; 30, 31: போளூர் தொகுதி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)